பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 மார்கழி 22 புதன்கிழமை (06-01-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 41

★ பொருளாதாரத் தடையை நீக்குக! ★ பூநகரிப் பாதையைத் திறக்குக!
★ அத்தியாவசியப் பொருள்களை அனுப்புக! ★ புலிகளுடன் பேசுக!

# நாலு அம்சக் கோரிக்கையை முன்வைத்து வெகுசன போர்

## திங்களன்று பேரணி நடக்கும்

யாழ்ப்பாணம், டிசம்பர் 6

★ தமிழர்களுக்கு எதிராக கடந்த 32 மாதகாலமாக விதிக்கப்பட்டிருக்கும் பொருளாதாரத் தடையை நீக்குக!

★ மக்களின் அடிப்படைத் தேவைகளான உணவு, உறைவிடம், சுகாதாரம், கல்வி போன்றவற்றுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களை தங்கு தடையின்றி அனுப்புக!

★ பூநகரியில் நிலை கொண்டுள்ள இராணுவத்தை அகற்றி, குடாநாட்டுக்கான போக்குவரத்துப் பாதையைத் திறக்குக!

★ கருத்தில்லா யுத்தத்தை நிறுத்தி விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்துக!

— இத்தகைய நான்கு கோரிக்கைகளை முன்வைத்து எதிர்வரும் 11 ஆம் திகதி திங்கள் யாழ்நகரில் வெகுசனப் பேரணி ஒன்று நடைபெறவிருக்கிறது.

நேற்று யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்ற யாழ். மாவட்ட வெகுசன அமைப்புகளின் பிரதிநிதிகளின் கூட்டத்தில் இதுபற்றித் தீர்மானிக்கப்பட்டது.

தமிழீழ வெகுசன அமைப்பு

(2 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி




சாத்வீகப் போராட்டம் அவையளுக்கு எங்கை விளங்கப் போகுது ...?

## முன்னோடித் தேர்வு:
## 13 மாணவருக்கு 8 பாடங்களிலும் 'டி'

யாழ்ப்பாணம், ஜன. 6

கடந்த நவம்பரில் நடைபெற்ற ஜி. சி. ஈ. (சாதாரண தர) முன்னோடிப் பரீட்சையின் முடிவுகள் நேற்று வெளியாகின. யாழ். மாவட்டத்தில் 13 பரீட்சார்த்திகள் எட்டுப் பாடங்களிலும் சிறப்பு சித்தி (''டி'') பெற்றுள்ளனர்.

கொக்குவில் இந்துக்கல்லூரி, இந்து மகளிர் கல்லூரி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி ஆகியவற்றில் தலா இரு மாணவர்களும்—

சென். பற்றிக்ஸ் கல்லூரி, சென். ஜோன்ஸ் கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி, ஹாட்லிக் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி, தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி ஆகியவற்றில் தலா ஒருவரும் எட்டுப் பாடங்களிலும் சிறப்புச் சித்தி பெற்றிருக்கின்றனர்

அனைத்துப் பாடங்களிலும் பெற்ற மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரியைச் சேர்ந்த குணசேகரம் ஜூட் ரைறோன் (718 புள்ளிகள்) முதலாமிடத்தையும்—

வேம்படி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த சுசிலா கதிர்காமசேகரர் (706 புள்ளிகள்)

(2 ஆம் பக்கம் பார்க்க)

## கோப்பாயில் திங்கள் இரவு வாகனம் மீது குண்டுவீச்சு

யாழ்ப்பாணம், ஜன. 6

கோப்பாய் தெற்கு, பழம் வீதியில் உள்ள வயல் மதவடி என்று அழைக்கப்படும் உச்சுவில்குள மதவடியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை) இரவு கைக்குண்டு (கிரனேட்) வீச்சுச் சம்பவம் ஒன்று இடம் பெற்றது.

சம்பவதினம் இரவு எட்டு மணியளவில் உச்சுவில்குள மதவடியில் சென்று கொண்டிருந்த ''பஜிரோ'' வாகனம் மீது இனந்தெரியாத நபர் ஒருவர் கைக்குண்டை வீசி விட்டு மறைந்துவிட்டார்.

''பஜிரோ'' வாகனத்துக்கோ, அதில் பயணம் செய்த எவருக்குமோ பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை

வெடித்தது கைக்குண்டு தான் என்பது சம்பவம் நடந்த இடத்திலிருந்து கண்டெடுக்கப்பட்ட ''லெவரில்'' இருந்தும் ''போல்ஸ்'' களிலிருந்தும் உறுதி செய்யப்பட்டதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன பிரஸ்தாப கைக்குண்டு யுகோசிலாவாக்கியத் தயாரிப்பான எம் 75 புதிய ரகத்தைச் சேர்ந்தது எனக் கண்டறியப்பட்டுள்ளது.

[ 6ஆம் பக்கம் பார்க்க]

## தெரிவுக் குழுவின் யோசனை; புலிகள் முற்றாக நிராகரிப்பு

கொழும்பு, ஜன. 6

வடக்கு - கிழக்குக்கு இந்திய முறையிலான தனித்தனி அதிகாரப் பரவல் அலகுகளை வழங்குவது என நாடாளுமன்றத் தெரிவுக்குழு வெளியிட்ட யோசனையை விடுதலைப் புலிகள் இயக்கம் முற்றாக நிராகரித்துவிட்டது.

விடுதலைப் புலிகள் இயக்கப் பிரமுகர் திரு. யோகரத்தினம் யோகி நெதர்லந்து வானொலிக்கு அளித்த பேட்டி ஒன்றில் முன்கண்டவாறு தெரிவித்தார் என ''சண்டே ரைம்ஸ்'' தகவல் வெளியிட்டிருக்கிறது.

தமிழர்களின் வடக்கு கிழக்கு தாயகத்தை இரண்டாகப் பிரிப்பதாக தெரிவுக் குழுவின் யோசனை அமைந்துள்ளதாகக் கூறிய திரு.யோகி விடுதலைப் புலிகள் இயக்கத்தால் இதனை முற்றாக ஏற்க முடியாதுள்ளது என்றும் சொன்னார்.

விடுதலைப் புலிகளின் அடிப்படைக் கோரிக்கை தமிழர் தாயகம் என்பதே. அரசாங்

[5 ஆம் பக்கம் பார்க்க]

## வலுவான ராணுவ நடவடிக்கை இப்போதைக்கு இடம் பெறாது?

### இரண்டும் கெட்டான் நிலையில் ஸ்ரீலங்கா அரசு

கொழும்பு, ஜன. 6

வடக்கு - கிழக்கு பகுதிகளில் வலுவான இராணுவ நடவடிக்கை எடுக்கப்படும் சாத்தியம் தற்போது சிறிதளவே காணப்படுவதாகவும்—

கூட்டுப்படைகள் தளகர்த்தரின் கோரிக்கையை ஏற்று ஆட்பலம் மற்றும் ஆயுதபலம் முதலியவற்றை அரசு ஆயுதப் படைகளுக்கு வழங்கினால் கூட விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் வெற்றி கொள்ளும் சாத்தியம் சிறிதே காணப்படுவதாகவும்—

''சண்டே ரைம்ஸ்'' அரசியல் செய்தியாளர் எழுதியுள்ளார்.

''யுத்தம் இல்லை, சமாதானம் இல்லை; இலங்கை எங்கே செல்கிறது.?'' — என்ற தலைப்பில் இவ்விமர்சனம் எழுதப்பட்டிருந்தது.

[5 ஆம் பக்கம் பார்க்க]

## கிளாலிப் படுகொலை

## மேலும் சில சடலங்கள் ஞாயிறு கரை ஒதுங்கின

யாழ்ப்பாணம் ஜன 6

கடந்த சனிக்கிழமை இரவு கிளாலிக் கடலில் பயணிகள் படகுகள் மீது ஸ்ரீலங்காப் படையினர் நடத்திய கொடூரத் தாக்குதல்களில் உயிரிழந்த பொதுமக்களின் மற்றும் சில சடலங்கள் ஆலங்கேணிப் பகுதியில் கரை ஒதுங்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை மொத்தம் 20 பேரின் சடலங்கள் கரை ஒதுங்கியிருக்கின்றன.

கரையொதுங்கிய சடலங்களில் சில எரியுண்ட நிலையிலும், பொனட்கத்தி வெட்டுக்கும், துப்பாக்கிச் சூட்டுக்கும் இலக்கான நிலையிலும் காணப்பட்டதாகத் தெரிய வந்தது.

சரவணையைச் சேர்ந்த துரை என அழைக்கப்படும் நடராசா குகதாஸ் (வயது 27), அவரது சகோதரன் நடராசா கிளி (வயது 25), சரவணையைச் சேர்ந்த அப்புத்துரை ராஜன் (வயது 18) ஆகியோரினதும் மற்றும் யாழ் நகரில் கடைகளுக்கு அப்பிள் விநியோகம் செய்பவர் எனக் கருதப்படும் ஒருவரினதும் சடலங்கள் ஞாயிறு இரவு கரை ஒதுங்கின இந்த நான்கு சடலங்களும் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டன.

இத்தாக்குதல் சம்பவத்தில் உயிரிழந்த மற்றைய 15 பேரின்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கரை ஒதுங்கிய சடலங்களில் கத்தி வெட்டுக் காயங்கள்

### பி. பி. ஸி பேட்டியில் தகவல்

கொழும்பு, ஜன. 6

கிளாலியில் படுகொலையுண்ட அப்பாவிப் பொது மக்களின் சடலங்கள் வெட்டுக் காயங்களுடனும், குத்துக் காயங்களுடனும் கிளிநொச்சிப் பகுதியில் கரை ஒதுங்கியதைக் கண்டேன்.

—ஸ்ரீலங்கா கடற்படையினரின் படுகொலை நடவடிக்கையின் போது தப்பிப் பிழைத்த ஒருவர் கொழும்பில் வைத்து இவ்வாறு தெரிவித்தார்.

தமக்கு ஏற்பட்ட அனுபவத்தை அவர் பி. பி. ஸி. செய்தியாளருக்கு விவரித்தார்

இரவு 8.30 மணியளவில் நடுக்கடலில் சூட்டுச் சத்தங்களும் ஷெல் சத்தங்களும் கேட்டன நாம் சென்ற படகின் மோட்டார் இயங்காமல் இருந்ததால் இச்சத்தங்களை தெளிவாகக் கேட்கக் கூடியதாகவிருந்தது.

சில படகுகளை படையினர் கட்டி இழுத்துச் சென்றனர்.

இச் சம்பவத்தில் கொலையுண்டவர்களும் காயமுற்றோரும் அப்பாவிப் பொது மக்களே. — இவ்வாறு அவர் தமது பேட்டியில் குறிப்பிட்டார். (உ-த-6)

## ஆஸ்பத்திரியில் சடலங்கள் நிறைந்து கிடந்தன

### உயிர்தப்பிய மதகுரு பேட்டி

கொழும்பு, ஜன 6

கிளாலிக் கடலில் தெய்வாதீனமாகத் தப்பி ஆலங்கேணியை அடைந்ததும் கிளிநொச்சிக்குச் சென்றோம். அங்கு — கிளிநொச்சி ஆஸ்பத்திரியில்—சடலங்கள் நிறைந்து கிடக்கக் கண்டோம்.

— இவ்வாறு கிளாலிச் சம்பவத்தில் உயிர் தப்பிய மதகுரு ஒருவர் பி. பி. ஸிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

புதுவருடம், கிறிஸ்மஸ் விடுமுறையைக் கழித்துவிட்டு தத்தமது இடங்களுக்குத் திரும்பும் அதிகாரிகள், ஆசிரியர்கள், டாக்டர்கள் பொறியியலாளர்கள் கரையில் காத்து நின்றனர்.

நாலும் மற்றும் மூவரும் ஒரு படகில் சென்றோம் திடீரென

(6ஆம் பக்கம் பார்க்க)

## சுயேச்சை விசாரணைக் குழு நியமிக்கக் கோரிக்கை

கொழும்பு, ஜன. 6

கடந்த சனியன்று கிளாலிக் கடலில் அப்பாவித் தமிழ்ப் பயணிகள் ஸ்ரீலங்கா கடற்படையினரால் படுகொலை செய்யப்பட்டமை குறித்து சுயேச்சையான விசாரணைக் குழு ஒன்றை நியமித்து விசாரிக்கும்படி ஜனாதிபதி பிரேமதாஸாவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது

கொழும்பில் உள்ள இரண்டு தமிழ் எம் பிக்கள் இந்தக் கோரிக்கையை விடுத்திருக்கின்றனர்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

கிளாலிப் படுகொலை
**அவலங்கள்**
தப்பி வந்தோரின் அனுபவங்கள்
2 ஆம், 3ஆம் பக்கங்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர் கல்வி வளர்ச்சி நிதி

**அதிர்ஷ்டலாப சீட்டு குலுக்கல்**

ஒட்டு வெளி, மிருசுவில்,

குலுக்கிய திகதி 01 - 01 - 1993

பரிசு பெற்ற இலக்கங்கள்

| | |
|---|---|
| 1.ஆம் பரிசு | 885 |
| 2.ஆம் பரிசு | 123 |
| 3.ஆம் பரிசு | 122 |

ஆறுதல் பரிசு:

| | |
|---|---|
| இலக்கம் | 22 |
| இலக்கம் | 213 |
| இலக்கம் | 803 |

(சிறுவர் கல்வி வளர்ச்சிக் குழு) (5709)



★ SPOKEN ENGLISH

With

GRAMMAR

திரு. ஹரி

திங்கள் புதன் } 1.00 மணி

★ TYPING, SHORT HAND

புதிய பிரிவுகள்

ஆரம்பம்: 6 - 1 - 93

BOND INSTITUTES

யாழ்ப்பாணம்.

(சி-1098)



## கண்ணீர் அலைகள்

02 - 01 - 1993 அன்று கிளாலியில்
கொடியவர்களின் சூட்டுக்கு
இரையாகி கடலுடன் கலந்துவிட்டவரும்
எமது கல்லூரி உயிரியற் பிரிவு மாணவன்

த. பாஸ்கரனின்
பாசமிகு தந்தையுமான

**ஆறுமுகம் தர்மராசாவிற்கு**

எமது இதயம் கலந்த
கண்ணீர் அஞ்சலிகள்

இவர்தம் பிரிவால் சோகக் கடலில் வாடும்
பாசமிகு நண்பன் பாஸ்கரனிற்கும், குடும்பத்தினருக்கும்
எமது ஆழ்ந்த அனுதாபங்களையும்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

கணிதப் பிரிவு மாணவர்கள்,
க. பொ. த உயர்தரம் 95,
யாழ். பரியோவான் கல்லூரி.

(23913)


# படகில் வந்து விழுந்தது குண்டு; தீப்பிழம்பு பற்றிப் பரவியது!

## காயமடைந்து தப்பியவர் பேட்டி

யாழ்ப்பாணம், ஜன. 6

பயணிகள் படகுகள் சிலவற்றை கடற்படையினர் திடீரென சுற்றி வளைத்துக் கொண்டனர். நாலு திக்குகளிலும் இருந்து கடற்படைப் படகுகள் சுற்றிச்சுற்றி தாக்குதல் நடத்தத் தொடங்கின.

திடீரென குண்டு போன்ற ஒரு பொருள் எமது படகில் விழுந்து வெடித்தது. படகில் தீப்பற்றியது. தீப்பிழம்பும் 'குபீரென' எழுந்தது.

படகில் இருந்து எங்களில் சிலர் கடலில் பாய்ந்தோம். இன்னும் சிலர் அதில் அகப்பட்டுக் கொண்டனர்.

கடந்த சனிக்கிழமை இரவு கிளாலிக் கடலில் நடந்த பயங்கரத்தை இவ்வாறு விவரிக்கிறார் காயமடைந்து தப்பி வந்த ஒருவர்.

பருத்தித்துறை பத்திரகாளி கோவிலடியைச் சேர்ந்த முத்துக்கறுப்பன் செல்வரட்ணம் (42 வயது) இவ்வாறு கூறினார்.

கையில் காயமடைந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ள இவர் மேலும் சொன்னதாவது:-

கிளாலியில் இருந்து படகுகள் சென்றுகொண்டிருந்தன. ஆலங்கேணிப் பகுதி நெருங்கிக் கொண்டிருந்த சமயம், கடலில் வெளிச்சம் ஒன்று தெரிந்தது.

ஆலங்கேணி நெருங்கி விட்டது என்று நாங்கள் எண்ணினோம். அந்தத் திசையை நோக்கி இன்னும் சில பயணிகள் படகுகளும் வந்துகொண்டிருந்தன.

குப்பிவிளக்கு எரிந்த படகை பயணிகள் படகுகள் அண்மித்தபோது, பின்பக்கத்தில் இருந்து திடீரென வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. தொடர்ந்து பல திசைகளிலும் இருந்து பயணிகள் படகுகளை நோக்கி தாக்குதல் நடந்தப்பட்டது.

நாங்கள் கூக்குரலிட்டபடி படகில் குப்புறப்படுத்துக் கொண்டோம். படையினர் எமது படகை நெருங்கி வந்து ஒரு பொருளை வீசினர். படகு தீப்பற்றி எரியத் தொடங்கியது.

இவர் கடலில் பாய்ந்தபோதும், மற்றும் சிலர் (பெண்கள் உட்பட) படகில் சிக்கிக் கொண்டனர். நான் இன்னும் ஒரு படகில் ஏற முற்பட்டேன். அப்போது படையினர் என்னை நோக்கிச் சுட்டனர். கிரனேட் வீச்சுக்களும் நடத்தப்பட்டன. அவ்வேளை எனது கையில் காயம் ஏற்பட்டது.

நான் ஏற முயன்ற படகைக் கைவிட்டு மீண்டும், நாம் பயணம் செய்த — எரிந்து கொண்டிருந்த படகை நோக்கி நீந்தி அதனைத் தொங்கிப் பிடித்துக் கொண்டேன்.

கையில் காயத்துடன் கடல் நீரை அள்ளி அள்ளி படகின் ஒரு பகுதியை அணைத்துக் கொண்டே இருந்தேன். அவ்வேளை என்னையறியாமல் அதில் மயங்கி விட்டேன்.

பின்னர் நான் தொங்கிக் கொண்டிருந்த —எரிந்த படகு — ஒரு 'புட்டி'யில் மோதி தரை தட்டியிருந்தது. எனக்கு உணர்வு வந்துகொண்டிருந்தது. நான் ஒதுங்கியது படையினரின் துறைப்பகுதி (ஞானிமடம்) யாக இருக்கலாம்.

அங்கிருந்து நீந்தியும் — கரை வழியாக நடந்தும் ஆலங்கேணியைச் சென்றடைந்தேன். நான் கைவிட்டு வந்த படகில் சிலரின் சடலங்கள் கிடந்தன. எண்ணிக்கை சரியாகத் தெரியவில்லை. — என்றார்.

(ஒ-15)

### 13 மாணவருக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டாமிடத்தையும்—

சென். ஜோன்ஸ் கல்லூரி கல்லூரியைச் சேர்ந்த ஞானப்பிரகாசம் வசந்தகுமார் (704 புள்ளிகள்) மூன்றாமிடத்தையும் பெற்றுள்ளனர்.

கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்ட பாடசாலைகளுக்குரிய பரீட்சை முடிவுகளும் அவ்வப் பகுதி கல்விப் பணிமனை ஊடாக நேற்ற வெளியிடப்பட்டன.

பரீட்சைச் சான்றிதழ்கள் பாடசாலைகளூடாக பரீட்சார்த்திகளுக்கு விரைவில் அனுப்பி வைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது

(உ)

### நாலு அம்சக்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி

களின் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தப் பேரணி, நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்றலில் இருந்து ஆரம்பித்து கோவில் வீதி வழியாக சென்று யாழ். செயலகத்தை அடையும்

வழியில் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அலுவலகத்திலும், பின்னர் யாழ். செயலகத்திலும் பேரணியில் செல்லும் மக்களின் சார்பில் மகஜர்களைக் கையளிப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

யாழ் மாவட்டத்தில் உள்ள அனைத்து வெகுசன அமைப்புகளும் கிராம, கோட்ட ரீதியாக அணிதிரண்டு பேரணியில் பங்கேற்கும் என நேற்றைய கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

(உ-3-152)

### சடலம் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், ஜன. 6

கடந்த சனியன்று கிளாலியில் படுகொலையுண்ட பயணி ஒருவரின் சடலம் அடையாளம் காணப்படாத நிலையில் நேற்றிரவு யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(உ-15)

### பகிஸ்கரிப்பு

தென்மராட்சி, ஜன 6

கிளாலி கடலில் ஸ்ரீலங்கா கடற் படையினரால் படுகொலை செய்யப்பட்ட கிளிநொச்சி மாவட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆ. தர்மராசாவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் நேற்று பளைக் கோத்தணிப் பாடசாலைகள் அனைத்தும் மூடி பகிஸ்கரிப்பு அனுஷ்டிக்கப்பட்டது.

(ச-117)

### ஆண்டு விழா

கொக்குவில், ஜன. 6

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகத்தின் 30 ஆவது ஆண்டு விழா இம் மாதம் 8 ஆம், 9 ஆம் திகதிகளில் நடைபெறும்.

விழாவின் முதல் நாள் நிகழ்ச்சிக்கு யாழ். மாவட்ட பிரதி ஆணையாளர் திரு. த. வைத்திலிங்கம் முதன்மை விருந்தினராகவும் இரண்டாம் நாள் நிகழ்ச்சிக்கு டாக்டர் இராஜேஸ்வரன் தம்பதிகள் முதன்மை விருந்தினராகவும் கலந்து கொள்வார்கள்


## முக்கிய அறிவித்தல்

தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்ட எனது

கணக்கியல் வகுப்பு

07—01—93 இல் இருந்து

எல்லாப் பிரிவுகளுக்கும்

வழமையான

நேர அட்டவணைப்படி

நடைபெறும்.

(சி/2899) ஸ்ரீ



SCHOOL OF TALANT

மாவடிச் சந்தி, வட்டுக்கோட்டை.

**A/L 93 கணக்கியல்**

புதிய பிரிவு

ஆரம்பம் : 07—01—93 மாலை 4 மணி

**AL 94 கணக்கியல்**

புதிய பிரிவு

ஆரம்பம் : 07 01—93 மாலை 5 மணி

தனித்துவம் பெற்ற ஆசிரியர்

**திரு. V. உருத்திரசிங்கம்**

முக்கிய குறிப்பு :

நிர்வாகியுடன் தொடர்புகொண்டு அனுமதிகளை பெற்றுக்கொள்ளவும்.

(5710)



சுன்னாகம் பல் நோ. கூ. சங்கம் [வ—து] சுன்னாகம்

## அறிவித்தல்

### கிளைக்குழு உத்தியோகத்தர் தெரிவு

பின்வரும் கிளைகளுக்கு கீழ் குறிப்பிடப்படும் கிளை நிலையத்தில் 28-11-92 ஆம் திகதி நடைபெற்ற நியமனப் பத்திரத்தாக்கலின் போது தெரிவுசெய்யப்பட்ட கிளைக்குழு உறுப்பினர்களுக்கு கிளைக்குழு உத்தியோகத்தர் தெரிவு இடம்பெறும் என்பதனை அறியத்தருகின்றோம்.

| கிளை இல. | உத்தியோகத்தர் தெரிவு இடம் பெறும் கிளை நிலையம் | காலம் |
|---|---|---|
| 1) 24 ஏழாலை தெற்கு | 24, ஏழாலை மேற்கு | 10-01-93 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணி |
| 2) 26 நிடத்புலம் | 19, ஈவினை | ,, ,, 3 30 ,, |
| 3) 30 புன்னாலைக்கட்டுவன் வடக்கு. | 19, ஈவினை | ,, ,, 4 30 ,, |

சகல உறுப்பினர்களுக்கும் தனித்தனி நிகழ்ச்சிநிரல் உரிய முகவரிக்கு அனுப்பப்பட்டுள்ளது.

தவிர்க்க முடியாத காரணத்தால் நிகழ்ச்சிநிரல் கிடைக்கப்பெறாதவர்கள் இவ் அறிவித்தலை ஏற்று, குறித்த தினத்தன்று, குறித்த கிளைக்கு சமுகம் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்

சுன்னாகம் பல நோ. கூ. சங்கம்,
சுன்னாகம்.
50—01—93

செயலாளர்

(சி/2500)



BITSMANS

கல்வி நிறுவனம்

மானிப்பாய்.

**93 O/L**

DAY CLASS

எமது வழமையான
ஆசிரிய குழுவினால்

ஆரம்பம்:
07 — 01 — 1993
வியாழன் 8 00 a.m.

2ஆவது பிரிவு
Spoken English
with Grammar

By:
M. A. ஹரி
B. A. Dip. in Eng.

ஆரம்பம்:
06 — 01 — 1993
புதன் 4-30 மாலை

(சி-1168)



வலிகாமம் தெற்கு பிரதேச சபை

சுன்னாகம்

**1993 - மாட்டிறைச்சிக் கடை, கருவாட்டுக் கடை இல- 3, 7**

குத்தகைக்கான

## கேள்வி அறிவித்தல்

மேற்படி கடைகளுக்கான 1993 ஆம் ஆண்டின் குத்தகைக்கான கேள்விகள், 12 - 11 - 92 ஆம் திகதி வெளியான உதயன் பத்திரிகையில் எம்மால் பிரசுரிக்கப்பட்ட கேள்வி நிபந்தனைகளுக்கமைவாக, மீண்டும் கோரப்படுகின்றன. விவரம் வருமாறு:-

| | |
|---|---|
| கேள்விப் பத்திரம் வழங்கல்:- | 11-01-93 ஆம் திகதி 12.00 மணி வரை |
| கேள்விப் பத்திரம் ஏற்றல்:- | 12-01-93 ஆம் திகதி மு.ப. 10.00 மணிவரை |
| கேள்விகள் திறத்தல்:- | 12-01-93 ஆம் திகதி மு ப. 11 00 மணிவரை |

மேலதிக விவரங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

செல்வி தனுஜா தணிகாசலம்
விசேட ஆணையாளர்
வலிகாமம் தெற்கு பிரதேசசபை

வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்,
04 - 01 93.

(சி-2531)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி நகராட்சி மன்றம்
# ஆதனவரி அறிவித்தல்

1993 ஆம் ஆண்டுக்கான ஆதனவரியை 31-01-1993 ஆம் திகதிக்கு முன்பாக முழுமையாக செலுத்துவோர்களுக்கு அவ்வருட மொத்த வரியில் 10 வீதம் கழிவு வழங்கப்படும். ஒவ்வொரு காலாண்டுக்குரிய வரியை அக்காலாண்டின் முதல் மாத முடிவுக்குள் செலுத்துவோருக்கு காலாண்டுக்கான வரியில் 5 வீதம் கழிவு வழங்கப்படும்.

குறிப்பிடப்பட்ட திகதிக்குள் ஆதனவரிகளைச் செலுத்தத் தவறினால் வசிப்பிடங்களுக்கும், வெற்றுக் காணிகளுக்கும் 15 வீதமும், ஏனைய ஆதனங்களுக்கு 20 வீதமும் விறாந்துக் கட்டணம் வரியுடன் சேர்த்துச் செலுத்தப்படவேண்டும்.

எனவே, தங்கள் ஆதனங்களுக்குரிய வரிகளை 31 - 01 - 1993 ஆம் திகதி பகல் 12-00 மணிக்கு முன்பாக முழுமையாக இக்காரியாலயத்தில் செலுத்தி வரிக்கழிவுகளைப் பெற்று, சபையுடன் ஒத்துழைக்குமாறு வரியிறுப்பாளர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

த. நவரத்தினராசா,
செயலாளர்,
நகரசபை, சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி.
04-01-1993.

(சி/4096)



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## வெற்றிடம்

### காவற் பொறுப்பாளர் (தாழ்தரம்) பதவி
### Post of Caretaker (Lower Grade)

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து காவற் பொறுப்பாளர் (தாழ்தரம்) பதவிக்கான விண்ணப்பங்கள் 1993-01-24 ஆம் திகதி வரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

சம்பளத்திட்டம்:

ரூபா 1,775—8 x 30—2,015 மாதமொன்றுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும்.
(இவை தவிர / வாழ்க்கைச் செலவுப்படியும் ஏனைய படிகளும் செலுத்தப்படும்.

தகைமைகள்:

1) எழுதுவதற்கும் வாசிப்பதற்குமான ஆற்றல் உடையவர் ஆக இருத்தல் வேண்டும்.
11) சமையலிலும் தளபாடங்கள் மட்பாண்டத் தொகுதி, வெட்டுக் கருவிகளின் தொகுதி, துணிகள் என்பவற்றைப் பேணுவதிலும் சூழவுள்ள தோட்டத்தைப் பராமரிப்பதிலும் அறிவுடையவராக இருக்தல் வேண்டும். பொருட்பதிவேட்டைப் பேணக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

குறிப்பு:

அ) மேலே கூறப்பட்டுள்ள தகைமைகளுடன் கீழே தரப்பட்ட தகைமைகளையும் உடையவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
1) மேலைத்தேய கீழைத்தேய உணவு வகைகளைத் தயாரிப்பதில் அறிவு உள்ளவர்.
11) பல்வேறு வகையான உணவு வகைகளைத் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் பொருள்களைப் பற்றிய அறிவுடையவராக இருப்பதுடன் குறித்த தொகையான ஆட்களுக்கு ஒவ்வொரு வகையான உணவுகளையும் தயாரிப்பதற்குத் தேவையான பொருள்களின் அளவு குறித்துப் பரிச்சயமுள்ளவர்.

ஆ) மேற்குறிப்பிட்ட பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டவர், துணைவேந்தர் விடுதியிலேயே தங்கியிருந்து பணியாற்றக் கூடியவராக இருத்தல் வேண்டும்.

தெரிவு:

பொது உளச்சார்புப் பரீட்சை மூலமும் நேர்முகப்பரீட்சை மூலமும்.

மேற்குறித்த பதவிக்கான விண்ணப்பப்பத்திரங்களை ரூபா 20/- நிதிக்கிளையில் செலுத்தி இப்பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவிப்பதிவாளர்/தாபனக் கிளையிலிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். தபால் மூலம் இவ்விண்ணப்பப் படிவங்களைப் பெற விரும்புவோர், அதற்கான வேண்டுகோளுடன் ரூபா 20/-க்கான காசுக்கட்டளை / தபாற்கட்டளையுடன் 2?x10 ச மீ. அளவுடையதும், சுயமுகவரியிடப்பட்டதும், ரூபா 1/- முத்திரை ஒட்டப்பட்டதுமான கடித உறையை அனுப்புதல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரசாங்க கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்டசபைகளில் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்களுடாக விண்ணப்பித்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும், இப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவிப்பதிவாளர் /தாபனக் கிளையிலிருந்து பெறப்படாத விண்ணப்பப் படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்களும், கேட்கப்பட்ட விவரங்கள் தெளிவாக குறிப்பிடப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

- பதிவாளர்.

யாழ்ப்பாணப் -
பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
1992-12-29.

(சி-4095)


கிளாலிக் கடல் படுகொலைகள்

# ஒன்பது சடலங்களின் மத்தியில் பதுங்கியிருந்து தப்பினேன்!

## படகு அறுந்ததால் உயிருடன் வந்தேன்
## சடலங்களும் மீட்கப்பட்டன - புளியங்கூடல்வாசி

யாழ்ப்பாணம், ஜன. 6

''படையினரின் தாக்குதலினால் நாம் பயணம் செய்த படகு எரியவே, அதிலிருந்து பாய்ந்து அங்கு தத்தளித்துக் கொண்டிருந்த மற்றொரு படகில் ஏறினேன்.

''அந்தப் படகில் கிடந்த ஒன்பது சடலங்களுக்கு மத்தியில் நான் குப்புறப்படுத்துக் கொண்டேன். சில நிமிடங்களில் அந்தப் படகில் ஏறிய படையினர், அதை எரிக்க முற்பட்டனர். எனினும் தெய்வாதீனமாக அதிலிருந்து தப்பிவிட்டேன்.''

கிளாலிக் கடலில் கடந்த சனிக்கிழமை இரவு நடந்த படையினரின் வெறியாட்டத்தில் இருந்து தப்பியவரான புளியங்கூடலைச் சேர்ந்த செல்வரட்ணம் ஐங்கரன் என்பவர் இவ்வாறு தெரிவித்தார்.

காயமடைந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கும் இவர், கிளாலிப் பயங்கரம் குறித்து விவரித்ததாவது:-

நான் பயணம் செய்த படகும் படையினரின் துப்பாக்கித் தாக்குதலுக்கு இலக்கானது. எமது படகு எரியத் தொடங்கவே நான் அதிலிருந்து பாய்ந்து நீந்த மற்றொரு படகில் ஏறியவேளை என்னை நோக்கி சுடப்பட்டது. அப்போது எனது இரு கால்களிலும் காயங்கள் ஏற்பட்டன.

காயமடைந்த நானும், மற்றொருவரும் படகில் உள்ளே விழுந்தோம். அப்படகில் காயங்களுடன் ஒன்பது பேரின் சடலங்கள் அலங்கோலமாகக் கிடந்தன. அவற்றுக்கு இடையில் நாங்களும் முகம்குப்புறப் படுத்துக்கொண்டோம்.

### சடலங்கள் மீது குதித்தனர்

அப்போது நாம் படுத்திருந்த படகைநோக்கி, மற்றொரு படகு வரும் சத்தம் கேட்டது. அதில் வந்த படையினர் நாம் படுத்திருந்த படகில் ஏறினர். ஏனைய சடலங்களுடன் நாமும் அசையாது படுத்திருந்தோம்.

படையினரின் சிலர் சடலங்கள் மீதும் எம்மீதும் ஏறிப் பாய்ந்து துள்ளிக் குதித்தனர்.

அப்போது ஒருவன் மண்ணெண்ணெய் ஊற்றிப் படகையும், சடலங்களையும் கொளுத்தி எரித்துவிடுமாறு சிங்களத்தில் கூறினான் மற்றொருவன் படகை எரிக்க வேண்டாம்; கட்டி இழுத்துக் கொண்டு செல்வோம்— என்றான்.

### படகு அறுந்ததால் நாம் தப்பினோம்

எமது படகு மற்றும் இரு படகுகளுடன் இணைக்கப்பட்டது. இழுத்துச் செல்லப்பட்ட எமது படகு இழுபடாது நிற்பது போல் உணர்ந்தேன், ஆம்! எமது படகு அறுந்து விடுபட்டிருந்தது. அவ்வேளை...

எமது படகை நோக்கி ஒருவர் நீந்தி வந்தார். அவர் ஒரு படகோட்டி அவர் நாம் கிடந்த படகை ஒருவாறு ஆலங்கேணிப் பக்கமாகக் கரை சேர்த்தார்.

### சடலங்கள் மீட்கப்பட்டன

அந்தப் படகில் இருந்து காயமடைந்த அறுவர் மீட்கப்பட்டனர், 9 பேரின் சடலங்களும் மீட்கப்பட்டன.

அந்தப் படகில் பயணம் செய்து காயமடைந்தவர்களில் ஒருவரான பண்டத்தரிப்பைச் சேர்ந்தவர் என நம்பப்படும் பெண் ஒருவர் — சுயநினைவிழந்த நிலையில் செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் அநுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார் என்று அவர் கூறினார்.

(ஒ-15)

எங்கும் ஒரே ஓலம்! கூக்குரல்!!

# படகுப் பயணிகள் கதறக்கதற படையினர் சுட்டுத் தள்ளினர்

## கரை சேர்ந்தவர் தகவல்

யாழ்ப்பாணம், ஜன. 6

படகுகளில் ஏறிய, கடற் படையினர், பயணிகள் கதறக்கதறச் சுட்டனர் எங்கும் ஒரே ஓலம்; கூக்குரல்!

எனினும் படையினரின் தாக்குதல் தொடர்ந்தது. அவர்கள் சுட்டுக் கொண்டே இருந்தனர்.

கிளாலிக் கடலில் படையினரின் கோரத் தாண்டவத்தை இப்படி விவரித்தார் தப்பி வந்த பயணி ஒருவர்

புளியங்கூடலைச் சேர்ந்த கனகரத்தினம் தங்கராசா [26 வயது] என்ற அந்தப் பயணி மேலும் கூறியதாவது;

கிளாலியில் இருந்து புறப்பட்ட முதலாவது படகில் நாம் சென்று கொண்டிருந்தோம் நடுக்கடலில திடீரென பயணிகள் படகு மீது படையினர் கண்மூடித்தனமாக வேட்டுக்களைத் தீர்த்தனர்.

எமது படகின் மீது ஏதோ ஒன்று விழுந்து வெடித்தது. படகு குபீரென எரியத் தொடங்கியது. நானும் இன்னும் சிலரும் கடலில் பாய்ந்துவிட்டோம். எமது படகில் மரண ஓலங்கள் எழுந்தன.

நான் நீந்தியபடி அங்கு தத்தளித்துக் கொண்டிருந்த மற்றைய படகுகளில் ஒன்றில் ஏற முயன்றேன். அந்தப் படகில் இருந்தும் கூக்குரல்கள் வந்து கொண்டிருந்தன. மேலும் நான் ஏற முயன்ற இரண்டாவது படகில் படையினர் நிற்பதைக் கண்டேன்!

### கிரனேட் எறிந்தனர்

உடனே நான் ஆசை ஏதும் [illegible] நீந்திக் கொண்டிருந்தனர். எங்களை நோக்கி மீண்டும் வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. படையினர் கிரனேட்டுக்களையும் எறிந்தனர்.

சுமார் அரை மணித்தியாலம் வரை இந்தப் பயங்கரம் தொடர்ந்தது.

நானும் சரவணையைச் சேர்ந்த ராஜன் என்பவரும் சளைக்காது நீந்தினோம். ஏதோ ஒரு கரை தெரிந்தது கடலில் சில 'பரல்'கள் அநாதரவாக மிதந்து கொண்டிருந்தன நாம் இருவரும் 'பரல்'களில் ஏறி இளைப்பாறினோம் திடீரென எம்மீது 'சேர்ச் லைட்' விழுந்தது.

அப்போது தான் தெரிந்தது நாம் ஆனையிறவுப் பக்கம் வந்து விட்டோம் என்று. திடுக்குற்ற நாம் இருவரும் மீண்டும் எதிர்த்திசையில் நீந்த ஆரம்பித்தோம்.

சிறிது நேரத்தில் மற்றவர் (ராஜன்) உடல் தளர்ந்து திணறத் தொடங்கினார். வாயில் நுரை தள்ளத் தொடங்கியது. அவரால் தொடர்ந்து நீந்த முடியாது என்றபடியால் அவரை விட்டு விட்டு நான் நீந்தி ஒருவாறு ஆலங்கேணிப் பகுதியை அடுத்த நாள் காலை 6 மணியளவில் சென்றடைந்தேன் ராஜனுக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை— என்றார்.

(ஒ-15)


## ஓராண்டு நினைவஞ்சலி

### திருமதி றூபி கொலின்

தோற்றம்: 09 — 07 — 1921
மறைவு: 06 — 01 — 1992

அன்பினால் எமையெல்லாம்
ஆட்கொண்ட அன்னையே — உயர்
பண்புகள் அனைத்தையுமே உனதாக்கி
வாழ்ந்தெமக்கு வழிகாட்டி - இன்று
எம் கண்கள் எல்லாம் நீராக
காலமெல்லாம் நாம் வாட
விண்ணுலகம் சென்றீரோ
ஆண்டு ஒன்றல்ல ஆயிரம்தான்
சென்றாலும் - உங்கள் நினைவு
எம்மை விட்டு அகலாது.

உங்கள் பிரிவால் துயருறும்;
ரமணி (மகள்) ரவி (மகன்),
நிலா (மருமகள் , மிதுனன் (பேரன்)

பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

(23922)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

3 பேஸ், 2 H.P., 3 H.P., 4 H.P. மோட்டர்கள் ஸ்பின்னிங் மெஷின் விற்பனைக்குண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும். ஜவ்னா எலெக்றோ பிளேற்றேர்ஸ், இல. 7, கஸ்தூரியார் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (?3920)

ஆஸ்த்மா நோயாளர் பாவிப்புக்குரிய சாதனம் Ventalair Nebuliser Pump and Monitor புத்தம்புதியது. இறக்குமதி செய்யப்பட்டது. திருமதி யோகநாதன், 24, விதானையார் வீதி, ஈச்சமோட்டை, சுண்டிக்குளி. (5708)

## தவறிவிட்டது

சோதிடப் புத்தகங்கள் அடங்கிய பார்சல் திருநெல்வேலிக்கும், ஆவரங்காலுக்கும் இடையில் 2-1-93அன்று காலை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் அறிவித்தால் நேரில் வந்து பெற்றுக்கொள்வேன். சன்மானம் தரப்படும். சி. கிருஷ்ணபிள்ளை, 16/1, மணல்தறை ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (239-3)

## இலவச திருமண சேவை

36 வயது, திருவாதிரை, செவ்வாய் 2 சுவிஸில் தொழில்புரிபவருக்கு நகைத் தொழிலில் ஈடுபாடுள்ள மணப்பெண் தேவை. பெண்ணை அழைக்க ஆவன செய்யலாம். தொடர்பு: ஞாயிறு காலை து. விமலா, நாச்சிமார் கோவிலடி (?3 34)

29 வயது, இலக்கணத்துச் செவ்வாய், உத்தரம் 1, லண்டன் விசாவுடன் Computer Hardware படித்து தொழில் புரிபவருக்கு 26 வயதினுள் மணப்பெண் தேவை. இலங்கையில் திருமணம் செய்து விசாவுடன் அழைக்கப்படும். து. விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி (23935)

## வாடகைக்குத் தேவை

ஓய்வூதியம் பெறுபவருக்கு வீடு/ அனெக்ஸ்/ அறை வாடகைக்குத் தேவை. இருபாலை, கல்வியன்காடு, கட்டைப் பிராய் விரும்பத்தக்கது. கடித மூலம் தொடர்பு கொள்ளவும். இல. 478, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (23908)

## O/L கணிதம்

Distinction பெறுபேறடைய ஆண்டு 9, 10 உட்பட 30 வருட அனுபவம் உள்ள B Sc. (Cey) ஆசிரியரால் கற்பிக்கப்படும். இல. 85, சிவன்கோவிலடி, திருநெல்வேலி. [23887]

## சங்கீதம்

வட இலங்கைச் சங்கீத சபையின் இரண்டாந்தரப் பரீட்சைக்கான பாடத்திட்டத்திற்கு அமைய ஆசிரியை ஸ்ரீமதி தாட்சாயணி சிவானந்தசர்மா தயாரித்த 'சங்கீதம் வினா-விடை' சகல வகுப்பு மாணவர்க்கும் பயன் தரும். அனைத்துப் புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். (23893)

## சங்கீதம் வினா-விடை

ஆண்டு 10, 11இல் சங்கீதம் கற்போருக்கும் வட இலங்கை சங்கீத சபைப் பரீட்சைகளுக்குத் தோற்றுவோருக்கும் பயன்தரும் சங்கீதம் வினா-விடை விற்பனையாகின்றது. ஆக்கம்: செல்வி அநேகா, பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (23903)

## வெளிவந்துவிட்டது

புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றுவோருக்குப் பயன் தரும் தமிழ் ஆண்டு-5 செயல்நூல் வெளிவந்துவிட்டது. விரிவான விளக்கங்கள் மாதிரி வினாத்தாள்கள் கொண்டது. ஆக்கம்: த. துரைசிங்கம், ஸ்ரீகாந்தா புத்தகசாலை, யாழ்ப்பாணம். (23904)

## ராஜீவ் கொலை வழக்கு

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கு விசாரணை, சென்னையில் இதற்கென நிர்மாணிக்கப்பட்ட பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கொண்ட விசேட நீதிமன்றத்தில், இம்மாத பிற்பகுதியில் ஆரம் மாகும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

# இந்திய அமைச்சரவையிலும் சில தினங்களில் மாற்றம்

புதுடில்லி, ஜன. 6

அடுத்த ஏழு நாட்களில் இந்திய மத்திய அமைச்சரவையில் பெரிய மாற்றம் செய்யப்படவிருப்பதாக புதுடில்லி அரசியல் வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டது.

நீண்ட காலமாக எதிர்பார்க்கப்பட்ட இந்த மாற்றத்தின் போது சில கபினட் அந்தஸ்து பெற்ற அமைச்சர்களும் சில துணை அமைச்சர்களும் புதிய அமைச்சரவையில் இடம் பெறமாட்டார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதாக ''இந்துஸ்தான் டைம்ஸ்'' பத்திரிகை வெளியிட்ட பிரத்தியேகச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல அமைச்சர்களுக்கு புதிய அமைச்சுகள் வழங்கப்படவிருப்பதாக அரசு வட்டாரங்களை மேற்கோள் காட்டி இச்செய்தியில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஓ-எ)


அங்லோ ஏசியன் பேர்ட்டிலைசேர்ஸ்

கம்பனி வழங்கும்.. ...

"சுமிசிடின் சுப்பர்"

SUMICIDIN SUPER

வெங்காயம், கத்தரி, கோவா,
உருளைக்கிழங்கு, போஞ்சி
போன்ற பயிர்களைத் தாக்கும்
தாள் கோதிப்புழு, தண்டுதுளைப்பான்,
கோவா மயிர்கொட்டிப் புழு, டயமன் முதுகு வண்டு
மற்றும்
பூச்சிகளையும் திறம்பட கட்டுப்படுத்துகின்றது.

பீடை நாசனிகள் விற்பனையாளரிடம் பெற்றுக்கொள்ளலாம்

(சி-2864)


# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னையின் மடியில்:
20 — 02 — 1920

ஆண்டவன் அடியில்:
06 — 01 — 1991

## சபாபதிப்பிள்ளை தெய்வானை

(யாழ். வலி - வடக்கு, கட்டுவன்)

மூன்று ஆண்டுகள் மறைந்தாலும் - உங்கள்
நினைவு எங்கள் நெஞ்சைவிட்டு அகலாது
- அம்மா!


உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

அன்பில் நினைவு கூரும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

(23942)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் பொன்னம்பலம் கமலநாதன்

தோற்றம்:
01 – 09 – 1942

மறைவு:
19 – 12 – 1991

திதி: 06—01 1993

அன்புத் தெய்வமே! நாம் வாழ வழிகாட்டிய அன்பின் சிகரமே! எம்மை நல்வழி நடத்திய பண்பின் உறைவிடமே! கலங்கரை விளக்காய் ஒளி தந்து வாழவைத்த குடும்பத்தின் குலவிளக்கே! உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி, பிள்ளைகள், அம்மா,
சகோதரங்கள், மைத்துனர்கள்.

28, அருத்துசா லேன்,
வெள்ளவத்தை,
கொழும்பு - 6.

(23940)

# நன்றி நவிலலும் 37ஆம் நாள் நினைவஞ்சலியும்



பிறப்பு:
17 — 05 — 1919

இறப்பு.
02 — 12 — 1992

## மரியாம்பிள்ளை அருளானந்தம்

(யாழ். சிறைச்சாலை முன்னாள் ஓவசியரும், சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலய சங்கிரீத்தாமும்)

(07 - 01 - 1993)

இவரது மரணச் சடங்குகளில் பங்கு பற்றி எமக்கு ஆறுதல் கூறி எம்மைத் தேற்றிய உற்றார், உறவினர், பெருமக்கள், நண்பர்கள் ஆகியோருக்கு நன்றி கூறும் அதேவேளை, நாளை 07-01-93 இல் சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில் காலை 11.30 மணிக்கு நடைபெறும் இரங்கல் பலிப்பூசையில் பங்கு பற்றி தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் பங்கு கொண்டு செல்லுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்.

(5707)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### ஆதார வாழ்வுக்கு உதவும் திட்டங்கள்

1990ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் ஆரம்பமான போரின் விளைவாக யாழ்ப்பாணக் குடா நாட்டில் மட்டும் 42,000 மக்கள் அகதி முகாம் வாழ்க்கை நடத்த நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்கள். தமிழீழம் முழுவதையும் எடுத்துக் கொண்டால் அகதி முகாம்களில் வாழும் மக்களின் எண்ணிக்கை நிச்சயம் ஒரு லட்சத்தை தாண்டிவிடும் என்பதில் சந்தேகமில்லை.

அகதி முகாம் வாழ்க்கை நடத்துவோரைவிட ஆகக் குறைந்தது மூன்று மடங்கினர் தமது உறவினர்கள், நண்பர்கள், தெரிந்தவர்களின் வீடுகளில் ஒண்டிக் குடித்தனம் நடத்துகிறார்கள். இவர்களைவிட ஒன்றே கால் லட்சம் தமிழர்கள் இந்தியாவில் அகதி முகாம்களில் வேண்டா மக்களாக வாழ்ந்து வருகிறார்கள். இராணுவத் தாக்குதல்களுக்கு அஞ்சி மேற்கு நாடுகளுக்குச் சென்றவர்களின் எண்ணிக்கையும் ஒரு லட்சத்தை எட்டும்.

இவர்களில் தமிழீழப் பிரதேசங்களிலேயே அகதிகளாக வாழ்வோரின் முழு நலன்களையும் கவனிக்க வேண்டிய பெரும் பொறுப்பு அரசசார்பற்ற தொண்டர் நிறுவனங்களையும், பாதிப்புறாத ஏனைய தமிழ் மக்களையும் சார்ந்ததாகி விட்டது.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, இடம்பெயர்ந்தவர்களுக்காக அரசாங்கம் கோடிக்கணக்கான பணத்தைச் செலவிடுவதாக சமூகநலன் புனர்வாழ்வுத்துறை அமைச்சர் அறிவித்திருந்தார். ஆனால் அவர் காட்டிய கணக்கில் கால்பங்காவது தமிழ் அகதிகளுக்கு வந்து கிடைப்பதில்லை.

உதாரணத்துக்கு யாழ். குடாநாட்டை எடுத்துக் கொண்டால் நிவாரண உணவுப் பொருள்கள் மட்டும் தான் கிடைக்கின்றன. அதுவும் போதிய அளவில் அனுப்பப்படுவதில்லை. இடம்பெயர்ந்தவர்களுக்கு மாற்றுக் குடியிருப்பு வசதி, சுகாதார வசதி, சுயதொழில் வசதி என்பனவற்றைச் செய்து கொடுக்க வேண்டும் என்பதில் கொழும்பு அரசுக்கு ஒரு சதவீத அக்கறை தானும் இல்லை.

அரசாங்கம் வழங்கத் தவறும் உதவிகளை அரசசார்பற்ற தொண்டர் நிறுவனங்களே பெருமனதுடன், மனிதாபிமானத்துடன் செய்து வருகின்றன. ஆனால் அவற்றுக்கும் பல கட்டுப்பாடுகளையும், தடைகளையும் விதித்து அவர்களின் சேவையை மட்டுப்படுத்த அரசு முனைகிறது.

தமிழீழப் பிரதேசத்தில் அகதிமுகாம்களில் வாழும் மக்களின் வாழ்வுக்கு ஆதாரமான திட்டங்கள் தேவைப்படுகின்றன.

அவர்களை முகாம்களில், நெருக்கத்தில் வாழ விடாது குடியிருப்புக்கள் அமைத்துக் கொடுக்க வேண்டும். அரசாங்கம் வழங்கும் அரைவாசி அளவு நிவாரண உணவுப் பொருள்களுடன் அரைப்பட்டினி கிடக்க அனுமதியாது, அவர்களுக்கு தொழில் வாய்ப்புகளை வழங்கத் திட்டமிட வேண்டும். அதற்கான உதவிகளை வழங்க வேண்டும். இவற்றைச் செய்வதற்குப் போதிய வளங்கள் தேவை.

அரசசார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் தமக்குள்ள மட்டுப்படுத்தப்பட்ட வளங்களைத் தக்கபடி திட்டமிட்டுப் பயன்படுத்துவதே இதற்கான மார்க்கமாகும். அகதி முகாம்களுக்கு அருகில் உள்ள காணிகளில் இடம்பெயர்ந்தவர்களைப் பயிர்ச்செய்கையில் ஈடுபடுத்துவது போன்ற திட்டங்கள் அகதிகளின் அடிப்படை வாழ்வுக்குப் பெரிதும் உதவும். அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் இது போன்ற வேறு பயன்தரு திட்டங்களையும் வகுத்துச் செயலாற்ற வேண்டும்.

# அமைச்சரவையில் மாற்றம்; புதியவர்கள் சிலருக்கும் இடம்!

## 3 அமைச்சர்களின் பொறுப்பு குறைக்கப்படும்?

கொழும்பு, ஜன. 6

ஜனாதிபதி திரு ஆர். பிரேமதாச இன்னும் சில தினங்களுக்குள் அமைச்சரவையில் பல மாற்றங்களைச் செய்யவிருக்கிறார் என கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த அமைச்சரவையில் புதுமுகங்களுக்கு முக்கிய பொறுப்புகள் கிடைக்கவுள்ளன என்றும் அதேசமயம் மூன்று சிரேஷ்ட அமைச்சர்களின் பொறுப்புகள் குறைக்கப்படலாம் என்றும் தெரிய வருகிறது.

அமைச்சரவை மாற்றத்தின் படி—

நீதி உயர்கல்வி அமைச்சர் ஏ. சி. எஸ். ஹமீத் வெளிவிவகார அமைச்சராக நியமிக்கப்படவுள்ளார் என்றும்—

வடமேல் மாகாண முதலமைச்சர் காமினி ஜயவிக்கிரம பெரேரா புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சராகவும், கொழும்பு மாவட்ட எம். பியான ஹட்சன் சமரசிங்க தகவல்துறை ராஜாங்க அமைச்சராகவும், தகவல்துறை ராஜாங்க அமைச்சரான ஏ. ஜே. ரணசிங்க ஜனசவிய திட்டத்துக்குப் பொறுப்பாக நியமிக்கப்படவுள்ளார் என்றும் கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டங்களை அடுத்த இரண்டாண்டு காலத்திற்குள் துரிதப்படுத்தும் நோக்கத்துடனேயே ஜனாதிபதி பிரேமதாச அமைச்சரவையில் மாற்றங்களைக் கொண்டு வருகிறார் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, தமிழ் ராஜாங்க அமைச்சர் ஒருவர் 'சார்க்' நாடு ஒன்றுக்கு தூதுவராக நியமிக்கப்படலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (ஒ)

## திருவாசக விழா நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், ஜன 6

திருவண்ணைநகர் சிவன் கோயிலில் நடைபெறும் திருவாசகப் பெருவிழாவில் இறுதி நாளான இன்று காலை "அரிவையரின் ஆன்மீக விளையாட்டுக்கள்" என்னும் பொருள் பற்றி திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் சிறம்புச் சொற்பொழிவு ஆற்றுவார்.

வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் செல்வி இ இராசரத்தினம் தலைமைவகிக்கும் காலை நிகழ்ச்சிகளில் 'வண்ணக்கிளி மொழியாள் எல்லாரும் வந்தாரோ' என்னும் பொருள் பற்றிய மகளிர் மன்றம் நடைபெறும்.

யாழ். இந்துக் கல்லூரி அதிபர் திரு. அ. பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெறும் மாலை நிகழ்ச்சிகளில் கவியரங்கம், வழக்காடு மன்றம் ஆகியன இடம் பெறும். (க)

## கொமாண்டோ தளபதிக்கு பதவி உயர்வு

கொழும்பு, ஜன 6

விசேட பொலீஸ் கொமாண்டோப் படையின் தளபதி ஆர். கே. லயனல் கருணசேன கடந்த வெள்ளிக்கிழமை முதல் பிரதி பொலீஸ் மா அதிபர் தரத்துக்கு பதவி உயர்த்தப்பட்டிருக்கிறார்.

அம்பாறை—மட்டக்களப்புப் பிரிவில் பொலீஸ் கொமாண்டோ நடவடிக்கைகளுக்கும் ஜனாதிபதியின் பாதுகாப்புக்கும் பொறுப்பாக இவர் தற்போது கடமை புரிகின்றார். (ஒ-எ)

## புதிய ஆயர் கிளிநொச்சிக்கு இன்று வருகிறார்

யாழ்ப்பாணம், ஜன. 6

அங்கிலிக்கன் திருச்சபையின் புதிய ஆயர் அதிவண கென்னத் பெர்னாண்டோ இன்று கிளிநொச்சிக்கு வந்து சேரவிருக்கிறார்.

கிளிநொச்சியில் இரு தினங்கள் தங்கியிருக்கும் அவர் விசேட திருப்பலிப் பூசை ஒப்புக்கொடுப்பதுடன் அரச அதிகாரிகளுடனும், பொது மக்களுடனும் கலந்துரையாடி அவர்களின் கஷ்டங்களை நேரில் அறிந்து கொள்வார்.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் வந்து சேரும் அவர் 13 ஆம் திகதி வரை இங்கு தங்கியிருப்பார் என்றும்—

சேதமடைந்த பகுதிகளை அவர் பார்வையிடுவதுடன் மக்களுடனும், அரச அதிகாரிகளுடனும் கலந்துரையாடுவார் என்றும் — தெரிவிக்கப்பட்டது. ஆயர் கென்னத் பெர்னாண்டோ விடுதலைப் புலிகள் பிரமுகர்களுடனும் பேச்சுக்களை நடத்தவிருக்கிறார்.

இவருடன் யாழ். குருமுதல்வர் அருட்கலாநிதி வண. டொனால்ட் கனகரத்தினம், வண. நியன்சி பெரேரா, வண. எல். பீரிஸ் ஆகியோரும் இங்கு விஜயம் செய்யவுள்ளனர். (அ-3)

## அரசியல் பிரமுகர்களின்

# ஆயுதங்கள் மீளப்பெற்றால் பிரச்சினைகள் எழாது

## இப்படிச் சொல்கிறார் றொனி

கொழும்பு, ஜன. 6

அரசியல்வாதிகளுக்கும் ஏனையோருக்கும் வழங்கப்பட்ட ஆயுதங்களை அரசாங்கம் திரும்பப்பெற்றுக்கொள்ள வேண்டும் என்று முன்னாள் நிதி அமைச்சர் றொனி டி மெல் கோரிக்கை விடுத்துள்ளார்.

அமைதியை மீண்டும் நிலைநாட்ட அரசு உண்மையில் விரும்பினால் இந்த நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று கூறிய அவர், ஆயுதங்களிலும் பலாத்காரத்திலும் தாம் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை என்றும் கூறினார்.

அண்மையில் புளத்சிங்களவில் அவருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பின்போது அவரது ஆதரவாளர்களுக்கும் புளத்சிங்கள தொகுதியின் ஐக்கிய தேசியக்கட்சி எம். பி. சரத் ரணவக்காவின் ஆதரவாளர்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் ஒருவர் கொல்லப்பட்டும் பலர் காயமடைந்தனர் என்பதும் தெரிந்ததே.

அரசியல்வாதிகளுக்கு ஆயுதம் வழங்குவது ஜனநாயக அரசியலுக்கு முட்டுக்கட்டையாக உள்ளது என்றும் அவர் கூறினார். (ஒ-எ)

## இலங்கை சனத்தொகை

கொழும்பு, ஜன. 6

இலங்கையின் சனத்தொகை ஒரு கோடி 76 லட்சமாக அதிகரித்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

கடந்த ஆண்டில் சனத்தொகை வளர்ச்சி 13 சதவீதமாக இருந்தது. இந்த வீதத்தில் சனத்தொகை அதிகரிப்பு தொடருமானால், இன்னும் 50 ஆண்டுகளில் நாட்டின் சனத்தொகை 3 கோடி 50 லட்சமாக அதிகரிக்கும்.

இவ்வாறு குடிசன புள்ளிவிவரத் திணைக்களம் தெரிவித்துள்ளது. [ஒ-எ]

## தெற்கு நடவடிக்கைக்கு

# யாழ். பல்கலை. ஆசிரியர் ஆதரவு தெரிவித்துச் செய்தி

தென்னிலங்கைப் பல்கலைக்கழகங்களில் நடக்கும் போராட்டத்துக்கு தமது ஆதரவை வழங்குவதாக யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் முடிவு செய்துள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட இந்த முடிவை யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவர் அரு-திரு கலாநிதி ஏ. ஜே. வி. சந்திரகாந்தன் இலங்கைப் பல்கலைக்கழக ஆசிரிய சம்மேளனத்துக்கு அறிவித்தார்.

போர்க்கால சூழ்நிலையில் உயிராபத்துகளின் மத்தியில் எமது பணிகளை ஆற்றிவரும் நாம் சம்பள உயர்வை மட்டும் தனிமைப்படுத்தப்பட்ட முனைப்பான பிரச்சினையாகக் கருதவில்லை —

இரண்டரை வருடங்களுக்கு மேலாக பல தடைகளுக்கும், கட்டுப்பாடுகளுக்கும் மத்தியில் எமது ஆசிரியப் பணியை ஆற்றி வருகிறோம். இத்தகைய சூழலில் நாம் எமது பணிகளைக் கைவிடுதல் எமது மாணவருக்கு அளப்பரும் இடையூறுகளை ஏற்படுத்தும்—

எனவே அரசினால் எமக்கு இழைக்கப்படும் இப்பாரிய இடையூறுகளுக்கும் முகம் கொடுத்து இத்தனை இன்னல்கள் மத்தியிலும் எம்மால் இயங்க முடியும் என்று உறுதியாக செயற்படுவதே நாம் இராஜினாமாச் செய்வதிலும் பார்க்க அரசுக்கு விடுக்கும் மேலான ஒரு சவால் என்று கருதுகிறோம் — என்று அவர் தாம் [illegible] குறிப்பிடுகின்றார். (ஒ-எ)

## மிகப் பெரிய தங்க ரதம்

திருப்பதி, ஜன 6

திருப்பதி ஏழுமலையானுக்கு ரூபா ஒருகோடியே 60 லட்சம் செலவில் தங்க ரதம் தயாராகிறது. 35 கிலோ தங்கமும் ஆயிரத்து 100 கிலோ செம்பும் கலந்து இந்தத் தேர் உருவாக்கப்படுகிறது.

21.6 அடி உயரம், 13 அடி நீளம், 9 அடி அகலம் கொண்டதாக இந்தத் தேர் உருவாக்கப்பட்டு வருகிறது.

இந்தியாவிலேயே இந்த தங்கத் தேர் அளவில் பெரியது என குறிப்பிடத்தக்கது. (ஒ)

# 'புக்காரா' போர் விமானம் கொழும்பு வந்துவிட்டது!

'புக்காரா' ரக போர் விமானம் கொழும்புக்கு வந்து சேர்ந்து விட்டது என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த புதன்கிழமை ராட்சத ஹெர்கியூல்ஸ் சி - 131 போக்குவரத்து விமானம் ஒன்று புக்காரா போர் விமானத்துடன் கொழும்பு விமான நிலையத்தை வந்தடைந்தது.

கட்டுநாயக்காவில் உள்ள இலங்கை விமானப்படைத் தளத்திற்கு போர் விமானம் பின்னர் கொண்டு செல்லப்பட்டது.

தற்போது உலகில் ஒரு நாடும் "புக்காரா" ரக போர் விமானங்களை உற்பத்தி செய்வது இல்லை. இந்த ரக விமானங்களைக் கொள்வனவு செய்வது குறித்து கொழும்பில் படை அதிகாரிகள் மத்தியில் கருத்து வேறுபாடு நிலவியது தெரிந்ததே. (ஒ-எ)

# தேசிய மட்டத் தேர்தலுக்கு சுதந்திரக் கட்சி தயார்!

## சிறிமா பண்டாரநாயக்கா தகவல்

கொழும்பு, ஜன 6

தேசிய மட்டத்திலான தேர்தல் எதற்கும் சுதந்திரக்கட்சி தயாராக இருப்பதாக அக்கட்சியின் தலைவர் திருமதி சிறிமாபண்டாரநாயக்கா தெரிவித்தார்.

"32 ஆண்டு கால அரசியல் வாழ்வில் நான் பல சவால்களைச் சந்தித்துள்ளேன்"—என்று 76 வயதான சிறிமாவோ தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சி பதவிக்கு வந்தால் தற்போது திறக்கப்படும் 200 ஆடைத் தொழிற்சாலைகளும் மூடப்பட்டுவிடும் என்று ஜனாதிபதி பிரேமதாஸா கூறி வருவது முட்டாள் தனமானது என்றும் அவர் சொன்னார்.

"தற்போது நடக்கும் வடக்கு-கிழக்கு யுத்தத்தில் இருதரப்பிலும் வீரமிக்கவர்கள் சாகின்றார்கள். முடிவில்லாத யுத்தமாக இது இருக்கிறது. வடக்கு-கிழக்கு இணைப்பை ரத்துச் செய்யும் ஸ்ரீதிவாசன் யோசனையை நாம் இறுதியாக ஏற்றுள்ளோம். இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண தமிழ் அரசியல் கட்சிகளுடன் புரிந்துணர்வு ஒன்றுக்கு வர முடியும் என்று நான் நம்புகின்றேன்.

பண்டா-செல்வா உடன்பாடு அமுல் நடத்தப்பட்டிருந்தால் இந்தப் பிரச்சினையே இன்று ஏற்பட்டிருக்காது. ஆனால் ஐக்கிய தேசியக்கட்சி சதி செய்து அந்த உடன்பாட்டைக் கிழித்தெறிய வைத்தது. அதன் பின்னரே 1958 இல் முதலாவது சிங்கள - தமிழ் கலவரம் ஆரம்பமானது" — என்றும் அவர் கூறினார். [ஒ-எ]

## இன்று

யாழ்ப்பாணம், ஜன. 6

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புக்கள் அலகின் ஆதரவில் இன்று புதன்கிழமை மாலை 4 மணியளவில் 'எங்களையும் வாழ விடுங்கள்' எனும் வீடியோத் திரைப்படம் கைலாசபதி கலையரங்கில் காண்பிக்கப்படும் (க)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜன. 6

யுனிசெப் அனுசரணையுடன் யாழ். மாநகரசபையால் நடத்தப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான முதலுதவிப் பரீட்சையில் சித்தி அடைந்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவம் இன்று புதன்கிழமை பி. ப. 3 மணிக்கு மாநகரசபை சுகாதாரப் பணிமனையில் நடைபெறும்.

மாநகரசபை ஆணையாளர் திரு. வே. பொ. பாலசிங்கம் தலைமை வகிக்கும் இவ்வைபவத்தில் யாழ். பிராந்திய சுகாதார வைத்தியசாலைகள் பணிப்பாளர் டாக்டர் பொ. இரத்தினசபாபதி சான்றிதழ்களை வழங்குவார். யாழ் மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ. தெய்வேந்திரன் சிறப்புரை ஆற்றுவார்.

★ ★ ★

கொழும்புத்துறை, ஜன. 6

சுழிபுரம் ஐக்கியசங்க வித்தியாசாலையின் வருடாந்தப் பரிசளிப்பு விழா இன்று 6 ஆம் திகதி காலை வித்தியாலய அதிபர் திரு நா செல்வரத்தினம் தலைமையில் நடைபெறும். (உ-30)

## உற்சவம்

யாழ்ப்பாணம், ஜன 6

நல்லூர் சிவன் கோவிலில் நாளை வியாழக்கிழமை காலையில் சப்பறத் திருவிழாவும், வெள்ளிக்கிழமை காலை இரதோற்சவமும் நடைபெறும் [க]

## தெரிவுக்குழு....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கம் இதனை நிபந்தனை இல்லாமல் ஏற்றுக் கொண்டால் ஒழிய தீர்வு எதுவும் ஏற்பட முடியாது என்றும் அவர் சொன்னார்.

சமஷ்டி அரசமைப்பு முறையை பரிசீலனை செய்ய விடுதலைப் புலிகள் தயாராக இருந்தனர் ஆனால் அரசாங்கம் இறுதியாக வடக்கு-கிழக்கு இணைப்பை ரத்துச் செய்யவும் ஒற்றையாட்சி அரசமைப்பு முறையை நீடிக்கவும் தீர்மானித்துள்ளது

இணைப்பை ரத்துச் செய்யக்கூடியதாக ஸ்ரீநிவாசவின் சமஷ்டி யோசனையை திருத்துவதில் ஐக்கிய தேசியக் கட்சியும் சுதந்திரக் கட்சியும் கருத்துடன்பாடு கண்டுள்ளன.

தற்போதைய ஜனாதிபதி முறையில் ஒருவரிடம் அதிகாரங்கள் அனைத்தும் ஒப்புவிக்கப்பட்டுள்ளன. தமிழருக்கு என ஒரு சபையோ அல்லது இரு சபைகளோ இருந்தாலும் ஒற்றையாட்சி அரசமைப்பின் கீழ் ஜனாதிபதி மத்திய அரசின் ஆட்சியை எந்த நேரத்திலும் தமிழர் மீது திணிக்கமுடியும் – என்றும் திரு. யோகி கூறினார்.

"இந்திய அமைதிப் படையை வெளியேற்றிய பின்னர் நாம் இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருந்த போது, எம்முடன் நேரடிப் பேச்சுகள் நடத்துவதைத் தவிர்க்க அனைத்து அரசியல் கட்சிகளின் மாநாட்டை அரசு அறிமுகப்படுத்தியது"— என்று கூறிய திரு. யோகி, கொழும்புப் பேச்சுகள் தோல்வி அடைந்ததற்கு அரசே காரணம் என்றும் குற்றஞ்சாட்டினார்.

மாறிவரும் காலத்துக்கு ஏற்ப வடக்கு - கிழக்கில் பல கட்சி அரசியல் முறையை விடுதலைப் புலிகள் இயக்கம் வரவேற்கும் என்றும் திரு யோகி தெரிவித்தார். (உ-எ)

## வலுவான....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இறுதி ஆய்வின் படி—

முழு அளவிலான, உறுதியான இராணுவ நடவடிக்கையை விடுதலைப் புலிகளுக்கு எதிராக மேற்கொள்வதா அல்லது இரகசியமாகவோ அல்லது வேறுவழிகளிலோ உடன்பாடு ஒன்றைக் காணுவதா என்பது பற்றி அரசாங்கம் தீர்மானிக்கவேண்டியுள்ளது என்றும் அந்த கட்டுரையில் அரசியல் செய்தியாளர் தெரிவித்துள்ளார். (உ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேலும் சில சடலங்கள்.....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
பெயர், விவரங்கள் ஏற்கனவே வெளியாகியிருந்தன என்பது தெரிந்ததே.

உயிரிழந்த பத்துப் பேரின் சடலங்கள் நேற்று முன்தினம் இரவு கிளாலிக்கு கொண்டு வரப்பட்டன. பின்னர் அவை அங்கிருந்து அவர்களின் சொந்த இடங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

இச்சம்பவத்தில் காயமுற்ற —அரியாலை முள்ளிப் பகுதியைச் சேர்ந்த கந்தசாமி மதியரசன் (வயது 19), புளியங்கூடலைச் சேர்ந்த செல்வரட்ணம் ஐங்கரன் (வயது 27), பருத்தித்துறை பத்திரகாளி கோயிலடியைச் சேர்ந்த முத்துக்கருப்பன் செல்வரட்ணம் (வயது 42) ஆகியோர்-நேற்று முன்தினம் இரவு யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

காயமுற்று ஆபத்தான நிலையில் உள்ள ஒரு பெண்மணி கிளிநொச்சி ஆஸ்பத்திரியிலிருந்து அநுராதபுரம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டார் என தெரிய வந்தது.

# மரண அறிவித்தல்கள்

## கா. த பொன்னுத்துரை

(பிரபல வர்த்தகர்-இத்தாகந்தை)

கரம்பொன் கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் சுண்டுக்குளியில் வசித்தவருமாகிய கா. த. பொன்னுத்துரை 5-1-93ல் காலமாகி விட்டார்.

இவர் காலம் சென்ற வள்ளியம்மையின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற யோகாம்பிகையின் தகப்பனாரும், காலஞ்சென்ற கனகரத்தினம், காலஞ்சென்ற துரைச்சாமி பற்குளசிங்கம் ஆகியோரின் மாமனாரும், நடராசாவின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (6-1-93)இல் பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் இருந்து துண்டி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மு. வ. தர்மலிங்கம்.

29/1 கொழும்புத்துறை வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம். (23944)

## திருமதி சரஸ்வதி தியாகராஜா

யாழ்ப்பாணம் நாவலர் வீதியைச் சேர்ந்த திருமதி சரஸ்வதி தியாகராஜா (ராசாத்தி) காலமானார்.

இவர் தியாகராஜாவின் அன்பு மனைவியும், ஸ்ரீஸ்கந்தராஜா, நந்தினி, குமுதினி ஆகியோரின் அன்புத் தாயாரும், கருணாகரன், ரஞ்சினி ஆகியோரின் மாமியாரும், அன்றியா, சிந்துஜா ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று புதன்கிழமை (06-01-1993) காலை 10 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்

தகவல்;
S.P. தியாகராஜா.

182. நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். [23936]

## திருமதி இரதிலக்ஷ்மி ஆனந்தக்குமாரசாமி

திருமதி இரதிலக்ஷ்மி ஆனந்தக்குமாரசாமி (முன்னாள் அதிபர், கோப்பாய் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை) செவ்வாய்க்கிழமை 05-01-93 அன்று காலை பத்து மணியளவில் சிவபதம் அடைந்தார்.

இவர் காலஞ்சென்ற வழக்கறிஞர் திரு இ. ஆனந்தக் குமாரசாமி அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பொறியியலாளர் நாகசுந்தரம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும், பொறியியலாளர் திரு. இ. ரவிஸ்காந்தன் (கொழும்பு), வைத்திய கலாநிதி இ. இராமநாதன் (கொழும்பு) ஆகியோரின் அருமைத் தாயாரும், சுகந்த ஜோதி, வைத்திய கலாநிதி மைதிலி ஆகியோரின் அன்பு மாமியாரும், சுபகரி, அபர்ணா ஆகியோரின் அன்புப் பாட்டியும், புவனேஸ்வரி (லில்லி), திருமதி வரா. விசுவநாதன், வைத்திய கலாநிதி திருமதி மகாலக்ஷ்மி, இராஜலக்ஷ்மி, திருமதி சிவகாம சுந்தரி இராமலிங்கம் (இந்தியா), பார்வதி (NIE மகரகம), வைத்திய கலாநிதி சண்முகவேலு (லண்டன்), ஆகியோரின் அன்பு அக்காவும் ஆவார். ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
செல்வி பு. நாகசுந்தரம்
(சகோதரி)

(5711)

## திருமதி சின்னத்தங்கம் முத்துக்குமாரு

பன்னாலை, தெல்லிப்பழையைச் சேர்ந்த திருமதி சின்னத்தங்கம் முத்துக்குமாரு, கடந்த 25-12-92 அன்று படையினரின் எல்லைக்குள் அமைந்த பன்னாலையில் காலமானார். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொன். முத்துக்குமாரு,
பொன். தெய்வேந்திரன் (விரிவுரையாளர்)

''சத்திய கிரி''
இணுவில் கிழக்கு,
இணுவில். (5476)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 06-01-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# 'விழித்தெழுவோம்' பாடல் ஒலிப்பதிவு நாடா வெளியீடு

யாழ்ப்பாணம், ஜன. 6

விடுதலைப் புலிகள் மகளிர் படையணியினர் உருவாக்கிய ''விழித்தெழுவோம்'' பாடல் ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு விழா இன்று மாலை நான்கு மணிக்கு யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் செல்வி ஆர்த்தி தலைமையில் விழா நிகழ்ச்சி இடம்பெறும்.

விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி ஜெயா ஒலிப்பதிவு நாடாவை வெளியிட்டு வைப்பார்.

செஞ்சோலைப் பொறுப்பாளர் செல்வி ஜனனி, கவிஞர் மு. வே. யோ. வாஞ்சிநாதன், தமிழீழ காவல் துறைப் பொறுப்பாளர் திரு. பா. நடேசன் ஆகியோரின் சிறப்புரைகளும் —

துணை அதிபர் திருமதி கோகிலா மகேந்திரன், ஆசிரிய பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளர் திருமதி க. சிதம்பரநாதன், திரு. க. சொக்கலிங்கம் ஆகியோரின் மதிப்புரைகளும் விழாவில் இடம்பெறும்.

பாடல் ஒலிப்பதிவு நாடாவை உருவாக்கிய கலைஞர்களை கௌரவிக்கும் நிகழ்ச்சியும் அங்கு இடம் பெறும். (உ-5)

# பருத்தித்துறைக்கு 'குமாரி' மாத இறுதியில் வந்துசேரும்

## ம. எண்ணெய் தனிக்கப்பலில் வரும்

யாழ்ப்பாணம், ஜன. 6

யாழ். மாவட்டத்துக்குரிய அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிக்கொண்டு 'குமாரி' கப்பல் இம்மாத இறுதியில் பருத்தித்துறைக்கு வந்து சேரவிருக்கிறது.

கொழும்பில் இருந்து நேற்று யாழ்ப்பாணம் திரும்பிய— செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக்குழுவின்—யாழ். வதிவிடப்பிரதிநிதி மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

கொழும்புத்துறைமுகத்தில் தற்சமயம் தரித்து நிற்கும் 'குமாரி' கப்பலில் ஆயிரத்து 200 மெற்றிக் தொன் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை ஏற்றுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டு வருவதாகவும்—

அதனைத் தொடர்ந்து 'குமணி' கப்பலில் பொருட்கள் ஏற்றப்பட விருப்பதாகவும்—அவர் மேலும் தெரிவித்தார்.

அதே வேளை—

இந்த இருகப்பல்களுக்கும் புறம்பாக மற்றொரு கப்பலில் மண்எண்ணெய் ஏற்றி வரவும் முயற்சிகள் நடப்பதாக தாம் அறிந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார். [உ-3]

## நாளை

யாழ்ப்பாணம், ஜன 6

பண்டத்தரிப்பு கோட்ட கொத்தணி அதிபர்களுக்கான கூட்டம் ஒன்று நாளை வியாழக்கிழமை மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

இக் கூட்டத்தில் பாடசாலை மாணவர்களுக்கான சீருடை சம்பந்தமாக ஆராயப்படவிருக்கிறது. [க]

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜன. 6

யாழ். மாவட்டத்தில் கடமை புரியும் அரச கணக்காளர்களுக்கான கூட்டம் ஒன்று நாளை வியாழன் பிற்பகல் 3 மணிக்கு யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். (த)

## மீட்பு நிதி

யாழ்ப்பாணம், ஜன 6

இதுவரை மீட்பு நிதிசெலுத்தத்தவறிய வசதி படைத்தோர்—சகல உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளையும் சேர்ந்தோர்—தமது மீட்பு நிதிக் கடனை நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3 மணி முதல் 3.30 மணி வரை நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் செலுத்தலாம் என அறிவிக்கப்படுகிறது. [3]

## விடுவிப்பு

யாழ்ப்பாணம், ஜன 6

கடந்த அக்டோபர் மாதம் 7ஆம் திகதி கிளாலிக் கடற்பகுதியில் வைத்து ஸ்ரீலங்கா கடற்படையினரால் கைது செய்யப்பட்டதாகக் கூறப்படும் ஒருவர் நேற்று பலாலி இராணுவ முகாமில் வைத்து செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டார்.

பருத்தித்துறைப் பகுதியைச் சேர்ந்த மேற்படி நபர் கிளாலிக் கடற்பகுதியைக் கடக்க முயன்றபோது படையினரால் கைது செய்யப்பட்டு, பின்னர் பலாலி முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாகக் கூறப்பட்டது.

அவரை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகள் நேற்று பருத்தித்துறையில் வைத்து. அவரது உறவினர்களிடம் ஒப்படைத்தனர். (உ-3)

## பலருக்கு அடுத்த முறை இடமில்லை!

கொழும்பு, ஜன. 6

தற்போது மாகாணசபைகளின் முதலமைச்சர்களாக இருப்போரில் பலர் எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் நிறுத்தப்படமாட்டார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

சில முதலமைச்சர்கள் தாம் மத்திய அரசில் அமைச்சர்களாக இடம்பெற விருப்பம் தெரிவித்துள்ளனர் என்றும்—

ஊழல் குற்றச் சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ள சிலருக்குப் பதிலாக புதியவர்கள் நிறுத்தப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை—

மாகாணசபைத் தேர்தல் பிரசார வேலைகளை மேற்கொள்ளும்படி மாகாணசபை முதலமைச்சர்கள், அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்களை ஐ. தே. க. தலைமைப்பீடம் முடுக்கி விட்டிருப்பதாக [illegible] வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-எ)

## கோப்பாயில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இக்குண்டு வீச்சில் சம்பந்தப்பட்டவரை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் நடைபெற்றுக்கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சந்தேக நபரைக் கைது செய்வதற்கு மக்கள் ஒத்துழைப்பு வழங்கி, புதியவர்கள், சந்தேகத்துக்கு இடமானவர்களின் நடமாட்டங்களை அறிவிக்குமாறும் —

மக்களை விழிப்புணர்வுடன் இருக்குமாறும் — விடுதலைப் புலிகள் கேட்டுள்ளனர்.

கைக்குண்டு வீச்சில் சம்பந்தப்பட்டவருக்குச் சொந்தமானது எனக் கருதப்படும் ''ஏசியா'' ரக புதிய சைக்கிள் ஒன்றும் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர் சம்பவம் நடந்த இடத்தில் கடந்த சில நாட்களாக நடமாடியதாகவும் [illegible]
[அ-162-72]

# தோட்டைச் சூறையாட காதை அறுத்த கடற்படை!

## பெண்ணின் பணமும் அபகரிப்பு!!

ஏழாலை, ஜன. 6

கிளாலி ஊடாகப் பயணம் செய்த பொதுமக்களை கடற்படையினர் சுட்டும், வெட்டி எரித்தும் கொன்றது மட்டுமன்றி, அவர்களின் உடைமைகளையும் சூறையாடி உள்ளனர்.

கொலையுண்ட பெண்மணி ஒருவரின் தோட்டை அபகரிப்பதற்காக அவரது காதையே வெட்டிக் கொடூரம் புரிந்திருக்கிறார்கள்.

ஏழாலை மேற்கைச் சேர்ந்த திருமதி சிவலிங்கமும், சனிக்கிழமை இரவுப் படுகொலைகளின்போது மரணமான ஒருவராவார். அவரது சடலம் திங்கள் இரவு ஏனைய சடலங்களுடன் இங்கு கொண்டுவரப்பட்டது. அவர் அணிந்திருந்த தோட்டை காதோடு அறுத்து எடுத்துள்ளனர். அது மட்டுமா, அவர் தமது மகனின் வெளிநாட்டுப் பயணத்துக்கென எடுத்துச் சென்ற ஒரு லட்சம் ரூபாவையும் சூறையாடிவிட்டனர்!

நான்கு பிள்ளைகளின் தாயாரான திருமதி சிவலிங்கம், சவூதியில் பணிபுரிந்து தொழில் ஒப்பந்தம் முடிந்து கனடா செல்லவிருந்த மகனைக் கொழும்பில் சந்திப்பதற்காக சனிக்கிழமை இங்கிருந்து பயணமானார், அப்போது மகனது பயணச் செலவுக்குக் கொடுப்பதற்காக ஒரு லட்சம் ரூபவையும் எடுத்துச் சென்றிருந்தார் [அ-45]

# தமிழகத்தில் கைதான தீவிரவாதி மர்ம மரணம்

சென்னை, ஜன. 6

சென்னையில் தமிழகப் பொலீஸாரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ்த் தீவிரவாதி ஒருவர் மர்மமான முறையில் உயிரிழந்தார்.

தடுத்து வைக்கப்பட்டிருந்த கட்டடத்தின் முதன் மாடியிலிருந்து குதித்த போது தலையில் ஏற்பட்ட காயத்தினால் அவர் உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டது.

பொலீஸ் காவலில் இருந்து தப்பிச் செல்ல முயற்சித்த போதே அவர் உயிரிழந்ததாக பொலீஸார் தெரிவித்தனர்.

கடந்த திங்களன்று எழும்பூரில் வைத்துக் கைது செய்யப்பட்ட சந்திரன் என்ற தீவிரவாதியே உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

1990 செப்டம்பரில் சென்னையில் தேசிய ஒருமைப்பாட்டுச் சட்டம் நடந்த தினமன்று, கூட்டம் இடம்பெற்ற கட்டடத்தை குண்டு வைத்துத் தகர்க்க எத்தனித்தார் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

கைதான சமயம் இவரிடமிருந்து கைக்குண்டுகள், துப்பாக்கிகள் மற்றும் வெடிப்பொருட்கள் கைப்பற்றப்பட்டதாகப் பொலீஸார் குறிப்பிட்டிருந்தனர்.

தேசிய ஒருமைப் பாட்டுக் கூட்டத்தில் இந்தியாவில் உள்ள அனைத்துக் கட்சிகளையும் சேர்ந்த முக்கிய பிரமுகர்கள் பங்குபற்றுவது வழக்கம் என்பது தெரிந்ததே.

# தமிழ்நாட்டில் மீண்டும் விடுதலைப் புலிகள் இயக்கம்

## காங்கிரஸ் எச்சரிக்கிறது

தமிழகத்தில் விடுதலைப்புலிகள் இயக்கம் மீண்டும் செயல்படுவதற்கான அறிகுறிகள் தென்படுவதாகவும்—

இதனை உடனே தடுத்து நிறுத்த மத்திய மாநில அரசுகள் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி வலியுறுத்தியுள்ளது.

சென்னையில் நேற்று வாழப்பாடி இராமமூர்த்தி தலைமையில் நடைபெற்ற காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் இது தொடர்பான தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

தமிழகத்தில் இருந்து பெட்ரோல், டீஸல் மற்றும் மருந்து வகைகள் இலங்கைக்குப் பெருமளவில் கடத்தப்படுவதாகவும்—

பாதுகாப்பு நடவடிக்கையில் ஏற்பட்ட தொய்வே இதற்குக் காரணம் என்றும் அத்தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

இத்தொய்வை நீக்க, உறுதியான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்; இல்லாவிட்டால் பேரபாயம் விளையும் என்றும் தீர்மானத்தில் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.

## சந்திப்பு

அமெரிக்க விஜயத்தை முடித்துக்கொண்டு அநுரா பண்டாரநாயக்கா கொழும்பு திரும்பினார்.

இம்மாதம் 8ஆம் திகதி வரும் அமரர் பண்டாரநாயக்காவின் 94ஆவது பிறந்த தினத்தை கொண்டாடுவது பற்றி தமது தாயாரான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவை அநுரா சந்தித்துப் பேசினார்.

இச்சந்திப்பை அநுராவின் மூத்த சகோதரியான சுனேத்ரா நாணயக்காரா ஒழுங்கு செய்திருந்தார். கடந்த சில காலமாக அநுரா தமது தாயாரை நேரில் சந்திப்பதைத் தவிர்த்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-எ)

## சுயேச்சை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

படகுகளில் வந்தவர்கள் அப்பாவிப் பயணிகள் என்று தெரிந்தும், கடற்படையினர் தாக்குதல் நடத்தியிருக்கின்றனர் என்றும்—

ஐம்பதுக்கு அதிகமானோர் காயமடைந்தோ அல்லது உயிரிழந்தோ அல்லது காணாமற்போயோ உள்ளனர் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

அப்பகுதியில் நிர்க்கதியாகி நிற்கும் ஆயிரக்கணக்கான அப்பாவி மக்கள் தமது சொந்த இடங்களுக்குச் செல்வதற்கு வசதியாக, அப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் கடற்படை நடவடிக்கைகள் அனைத்தையும் இடைநிறுத்தும்படியும் அவர்கள் கோரியுள்ளனர். (உ-த-6)

## ஆஸ்பத்திரியில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதல் ஆரம்பமானது, எங்களது படகின் இயந்திரம் திடீரென நின்றது. அதனால் நாம் காற்றால் இழுபட்டுச் சென்றோம்.

தொடர்ந்து கடும் சூட்டுச் சத்தமும் மக்களின் அவலக்குரலும் கேட்டவண்ணம் இருந்தது. நாம் ஒருவாறு தப்பி ஆலங்கேணி கரையை அடைந்தோம். காலையில் கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்குச் சென்றபோது அங்கு உயிரிழந்த மக்களின் சடலங்கள் நிறைந்து கிடக்கக் கண்டேன். —இவ்வாறு அந்த மதகுரு குறிப்பிட்டார். (உ-த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org